# கேப்லான் நிறுவனத்துடன் மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி புரிந்துணர்வு ஒப்பந்தம்



புரிந்துணர்வு ஒப்பந்த பரிமாற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை நிர்வாகிகள், கேப்லான் நிறுவன இயக்குநர் உள்ளிட்டோர்.

**புதுச்சேரி, ஆக.18:** புதுவை மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி, மருத்துவமனை மற்றும் கேப்லான் நிறுவனம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

புதுச்சேரி ஸ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தலைவர், மேலாண்மை இயக்குநர் எம். தனசேகரன், கேப்லான் இயக்குநர் டென்சின் ஜெம்யங் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

கேப்லானின் இந்திய தலைமையாளர் அபிஷேக் பவாதங்கர், மணக்குள விநாயகர் கல்விக் குழுமச் செயலர் மருத்துவர் நாராயணசாமி கேசவன், பொருளாளர் த. ராஜராஜன், இயக்குநர் டி. ராஜ கோவிந்தன், டீன் காக்னே, கார்த்திகேயன், கலைசெல்வன், மருத்துவமனை கண்காணிப்பாளர் பிரகாஷ், கிரிஜா மற்றும் துணைக் கண்காணிப்பாளர்கள் ஜெயஸ்ரீ, ஒருங்கிணைப்பாளர் சௌந்தர்யா, பதிவாளர் தட்சிணாமூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.

கேப்லான் கற்றல், கற்பித்தலில் ஈடுபட்டுள்ள நிறுவனமாகும். இந்த நிறுவனம் ஸ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி, மருத்துவமனையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செய்துள்ளது. இதன் மூலம், ஸ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி, மருத்துவமனை தனது மாணவர்களின் மருத்துவக் கல்விக்கு மதிப்புக்கூட்டலை அளிக்க முன் வந்துள்ளது.

கேப்லான் நிறுவனம் மருத்துவப் படிப்பில் சிறந்து விளங்கவும், நெக்ஸ்ட் மற்றும் சர்வதேச அளவிலான போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறவும் பயிற்சி அளிப்பதில் முன்னோடியாக உள்ளது.

2023-24-ஆம் கல்வி ஆண்டிலிருந்து கேப்லான் நிறுவனம் மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மாணவர்களுக்கு மேற்கண்ட தேர்வுகளுக்கான பயிற்சி உள்ளிட்டவற்றை அளிக்க உள்ளது என்று கல்லூரி நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

முறைகேடு புகார்